ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் (மஅதி–2) துறை

அரசாணை (நிலை) எண். 79 நாள் : 28.5.2007

படிக்க :

1. காஞ்சிபுரம் மாவட்டாட்சியர், சுற்றுலா பண்பாட்டுத் துறை செயலாளருக்கு அனுப்பியுள்ள நேர்முகக் கடித எண்.898/07/பி3, நாள் 14.2.2007.
2. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் 12.4.2007 அன்று சட்டப்பேரவையில் அறிவித்த அறிவிப்பு.
3. சுனாமி திட்ட செயலாக்க அலுவலர் நேர்முக கடித எண்.261/06/ஏ6, நாள் 17.4.2007.

**ஆணை:**

காஞ்சீபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர், சுனாமியால் பாதிக்கப்பட்ட சிற்ப கலைஞர்கள் மற்றும் கைவினைஞர்களுக்காக ஆசிய வளர்ச்சி வங்கி உதவியுடன் செயல்படுத்தப்படும் சுனாமி அவசரகால உதவித் திட்டத்தின் கீழ் மாமல்லபுரத்தில் ‘‘சிற்பப் பூங்கா’’ ஒன்று அமைப்பதற்கு திட்ட செயற்குறிப்பு ஒன்றினை அரசுக்கு அனுப்பியுள்ளார். இது சம்பந்தமாக 12.4.2007 அன்று இத்துறையின் மானிய கோரிக்கை விவாதத்தின் போது மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட அறிவிப்பினை செய்துள்ளார்:–

‘‘பாரம்பரியமிக்க நமது பண்பாட்டின் சின்னமாக விளங்கும் கிராம கைவினைஞர்கள் தொழில் மேம்பாட்டிற்காக, விழுப்புரம் மாவட்டத்தில் கைவினைஞர் கிராமம் ஒன்றும், மாமல்லபுரத்தில் சிற்பப் பூங்காவும் ஆசிய வளர்ச்சி வங்கி நிதி உதவியுடன் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைத்திட திட்டமிடப்பட்டுள்ளது.’’

2. மேற்கண்ட அறிவிப்பினைத் தொடர்ந்து சுனாமி திட்ட செயலாக்க அலகின், திட்ட செயலாக்க அலுவலர் ஒரு திட்ட செயற்குறிப்பினை கீழ்க்கண்டவாறு அரசுக்கு அனுப்பி வைத்துள்ளார்:–

காஞ்சீபுரம் மாவட்டம், மாமல்லபுரத்தில் சமுதாய பங்கு ரூ.1.69 கோடி உட்பட, சுமார் 10.75 கோடி செலவில் சிற்பக் கலைஞர்கள் தயாரித்த பொருட்களை காட்சிக்கு வைக்கவும் மற்றும் விற்பனை செய்யவும் ‘‘சிற்பப் பூங்கா’’ ஒன்று அமைக்கலாம். 120–க்கும் மேற்பட்ட தலைமை சிற்ப கலைஞர்களின் சிற்பகூடங்கள் / கடைகள் சுனாமியால் அழிந்து விட்டன. ஆகவே தலைமை சிற்ப கலைஞர்கள் மற்றும் அவர்களை சார்ந்து இருக்கும் இதர கைவினைஞர்கள் தத்தம் வாழ்வாதாரத்தை உறுதி செய்வதற்கு இந்த சிற்பப் பூங்கா மிகவும் உறுதுணையாக இருக்கும்.

3. அரசாணை (நிலை) எண்.655, வருவாய்த் துறை, நாள் 5.12.2005–ல், தமிழ்நாட்டில் சுனாமியால் பாதிக்கப்பட்ட 12 கடலோர மாவட்டங்களில் வாழும் மக்களுக்கு ஆசிய வளர்ச்சி வங்கி நிதி உதவியுடன் சுனாமி அவசர கால உதவித் திட்டத்தின் கீழ் வாழ்வாதார நிதியாக ரூ.190.095 கோடி அரசு ஒதுக்கியுள்ளது என்றும், இதில் ரூ.38.00 கோடி சமுதாய உட்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் பயிற்சிக்காக ஒதுக்கப்பட்டுள்ளது என்றும், சுனாமி திட்ட செயலாக்க அலுவலர் தெரிவித்துள்ளார். மாமல்லபுரத்தில் சிற்ப பூங்கா ஒன்றினை சுனாமி அவசரகால உதவித் திட்டத்தின் கீழ் செயல்படுத்த போதுமான நிதி உள்ளது என்று மேலும் அவர் தெரிவித்துள்ளார்.

4.மேற்கூறிய நிலையில், காஞ்சிபுரம் மாவட்டம் மாமல்லபுரத்தில் சிற்பப் பூங்கா (Sculptor's Park) ஒன்று ரூ.906.00 இலட்சம் செலவில், ஆசிய வளர்ச்சி வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும். சுனாமி அவசர கால உதவித் திட்ட சமுதாய உட்கட்டமைப்பு மேம்பாட்டுக் கூறு நிதியின் கீழ் அமைப்பதற்கு கொள்கை அளவில் ஒப்புதல் அளித்து ஆணை பிறப்பிக்குமாறு அரசினை சுனாமி திட்ட செயலாக்க அலுவலர் கேட்டுக் கொண்டுள்ளார்.

5. சுனாமி திட்ட செயலாக்க அலுவலரின் செயற்குறிப்பினை அரசு கவனமுடன் பரிசீலித்த பின்னர், காஞ்சிபுரம் மாவட்டம் மாமல்லபுரத்தில் சுமார் 10.75 கோடி செலவில் சிற்பப் பூங்கா அமைப்பதற்கு கொள்கை அளவில் ஒப்புதல் அளித்து அரசு ஆணையிடுகிறது. இதில் சமுதாயப் பங்கு (Community Contribution) ரூபாய் 1.69 கோடி போக எஞ்சிய ரூபாய் 9.06 கோடி (ரூபாய் ஒன்பது கோடியே ஆறு இலட்சம் மட்டும்) ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் சுனாமி அவசரகால உதவித் திட்டத்தின் கீழ் (Tsunami Emergency Assistance Project) செலவிட ஒப்பளித்து அரசு ஆணையிடுகிறது.

6. நிர்வாக ஒப்புதல் வழங்கும் பொருட்டு, விரிவான திட்டம் மற்றும் மதிப்பீடுகளை அரசிற்கு விரைந்து சமர்ப்பிக்குமாறு சுனாமி திட்ட செயலாக்க அலகின், திட்ட செயலாக்க அலுவலர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**க.அஷோக் வர்தன் ஷெட்டி**

அரசு செயலாளர்